

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (13.3.2026) அண்ணா அறிவாலயத்தில், புரட்சி அதிமுக முதன்மை செயலாளர் புகழேந்தி, கொள்கை பரப்புச் செயலாளர் சூரியமூர்த்தி, உள்ளிட்ட நிர்வாகிகள் சந்தித்து, 2026 சட்டமன்ற பொதுத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்தனர். உடன் அமைச்சர் கே.என். நேரு, நாடாளுமன்ற உறுப்பினர் திருச்சி சிவா, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கழக செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன் ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (13.3.2026) தலைமைச் செயலகத்தில், சென்னை பத்திரிகையாளர் மன்றத்தின் தலைவர் சுரேஷ் வேதநாயகம், பொதுச் செயலாளர் எம்.ஆசிப், துணைத் தலைவர் ஜே.மதன், பொருளாளர் எஸ். மணிகண்டன், உறுப்பினர்கள் பி.ஸ்டாலின், எஸ்.சுவாஸ்கர், எஸ்.பழனிவேல், எம். விஜயகோபால், எஸ்.கார்த்திகேயன், எஸ். சண்முகப்பிரியன் ஆகியோர் சந்தித்துப் பேசினர்.



கழகத் தலைவரும் – முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (13.3.2026) முகாம் அலுவலகத்தில், கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு செயலாளர் டாக்டர் அ.சுபேர் கான், இணைச் செயலாளர் சி. ஜெரால்டு, துணைச் செயலாளர்கள் சேக் அப்துல்லா, கா.ரபி அகமது, ஷாகுல் ஹமீது, இராபர்ட் இராஜதுரை உள்ளிட்ட நிர்வாகிகள் சந்தித்து, கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு சார்பில் 15.3.2026 அன்று சென்னை, அமைந்தகரையில் நடைபெறவுள்ள இஃப்தார் புனித ரமலான் நோன்பு திறப்பு விழாவிற்கான அழைப்பிதழை வழங்கினார்கள். உடன், அமைச்சர் கே.என். நேரு, அமைச்சர் எ.வ.வேலு, அமைச்சர் சா.மு.நாசர், நாடாளுமன்ற உறுப்பினர் திருச்சி சிவா, கழக செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன் மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.



முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (13.3.2026) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசு நியாய விலைக்கடை பணியாளர் சங்கத்தின் மாநிலத் தலைவர் கோ.ஜெயசந்திரராஜா, பொதுச் செயலாளர் கே.ஆர்.விஸ்வநாதன், பொருளாளர் பொன். அமைதி, செயலாளர்கள் ஏ.சி. சேகர், எஸ். பாஸ்கரன் ஆகியோர் சந்தித்து, கூட்டுறவு நிறுவனங்களால் நடத்தப்படும் நியாய விலைக் கடைகளில் பணிபுரியும் விற்பனையாளர்கள் மற்றும் கட்டுநர்களுக்கு 15% வரை ஊதிய உயர்வு அளித்தமைக்காக நன்றி தெரிவித்துக்கொண்டனர். உடன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை செயலாளர் டாக்டர்.கே.சு.பழனிசாமி, கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் க.நந்தகுமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.



முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.3.2026) சென்னை, மெரினா கடற்கரை, உழைப்பாளர் சிலை அருகில், பெருநகர சென்னை மாநகராட்சியின் 5 ஆண்டுகள் (2021–2026) சாதனைகளை விளக்கும் குறும்படம் LED திரையில் திரையிடுவதை நேரில் பார்வையிட்டார். உடன், அமைச்சர் கே.என். நேரு, அமைச்சர் எ.வ.வேலு, அமைச்சர் மா.சுப்பிரமணியன், அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, துணை மேயர் மு.மகேஷ்குமார், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழு தலைவர் நே.சிற்றரசு மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.03.2026) தலைமைச் செயலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக தூத்துக்குடி மாவட்டம், உடன்குடியில், தமிழ்நாடு மின்உற்பத்தி கழகம் (TNPGCL) சார்பில், 13,077 கோடி ரூபாய் செலவில் புதியதாக நிறுவப்பட்டுள்ள 2x660 மெகாவாட் திறன் கொண்ட மிக உய்ய (Super Critical) அனல் மின் நிலையத்தின் அலகு1னை திறந்து வைத்து, மின்சார உற்பத்தினை தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.3.2026) தலைமைச் செயலகத்தில், நகராட்சி நிருவாக இயக்குநரகத்தின் அலுவலக பயன்பாட்டிற்காக 3.28 கோடி ரூபாய் மதிப்பிலான 28 வாகனங்களை வழங்கிடும் விதமாக அவ்வாகனங்களுக்கான சாவிகளை ஓட்டுநர்களிடம் வழங்கினார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர் கே.என்.நேரு, அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர், பிரியா, துணை மேயர் மு. மகேஷ் குமார், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (13.3.2026) தலைமைச் செயலகத்தில், முன்னாள் படைவீரர்கள் மற்றும் முன்னாள் படைவீரர்கள் கழகத்தைச் சார்ந்த அஜய் குமார் யாதவ், பி. பிரேம் குமார், பத்ரன், ஜான் பிரின்ஸ், ஆர். நிர்மல் குமார், ஜெஸ்ஸன் பீட்டர், எம். சுரேஷ் குமார், ஆர். கணேசன், எஸ்.முனுசுவாமி, திருமதி திவ்ய பிரபா, லஷ்சமையா, தமிழ்குமார், சரவணன், எம். அருண், பி.தென்னரசு, கே.ஜெயகுமார், டி.ரமேஷ், கே. அருண்குமார், பி.பிரவீன்குமார், பி.முருகன் ஆகியோர் சந்தித்து, தமிழ்நாட்டை சேர்ந்த முன்னாள் படைவீரர்கள் வசதிக்காக செங்கல்பட்டு மாவட்டம், புனித தோமையார் மலையில் 35 கோடியே 45 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் முன்னாள் படைவீரர்கள் தங்கும் விடுதி மற்றும் பயிற்சி மையக் கட்டடம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டியதற்காக நன்றி தெரிவித்துக்கொண்டனர். உடன், அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

## ரூ.211.90 கோடியில் 45 திட்டப் பணிகள் திறப்பு – ரூ.53.76 கோடியில் 9 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல்!

# நகராட்சி நிருவாக இயக்குநரகத்தின் அலுவலகப் பயன்பாட்டிற்காக ரூ.3.28 கோடியில் 28 புதிய வாகனங்கள்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, மார்ச் 15–

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.3.2026) தலைமைச் செயலகத்தில், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் நகராட்சி நிருவாக இயக்குநரகத்தின் சார்பில் 177.17 கோடி ரூபாய் செலவில் 35 முடிவுற்ற பணிகளையும், பேரூராட்சிகள் இயக்குநரகத்தின் சார்பில் 32.23 கோடி ரூபாய் செலவில் 9 முடிவுற்ற பணிகளையும், பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் 2.50 கோடி ரூபாய் செலவில் பள்ளிக் கட்டடத்தையும் திறந்து வைத்தார். மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் 16.49 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 5 புதிய திட்டப் பணிகளுக்கும், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் சார்பில் 25.79 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 3 புதிய திட்டப் பணிகளுக்கும், நகராட்சி நிருவாக இயக்குநரகத்தின் சார்பில் 11.48 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 1 புதிய திட்டப் பணிக்கு அடிக்கல் நாட்டி, நகராட்சி நிருவாக இயக்குநரகத்தின் அலுவலக பயன்பாட்டிற்காக 3.28 கோடி ரூபாய் மதிப்பிலான 28 வாகனங்களை வழங்கினார்.

**நகராட்சி நிருவாக இயக்குநரகம் சார்பில் முடிவுற்ற பணிகளை திறந்து வைத்தல்**

ஒசூர், தாம்பரம், திருப்பூர், கோயம் புத்தூர் ஆகிய மாநகராட்சிகளில், 70.59 கோடி ரூபாய் செலவில், முதல்வர் படைப்பகங்கள், வணிக வளாகங்கள், வகுப்பறைகள், அறிவியல் பூங்காக்கள், நவீன பேருந்து நிலை யங்கள், நவீன குப்பை மாற்று நிலையம், குடிநீர் விநியோக குழாய் அமைத்தல் உள்ளிட்ட பணிகள்;

திருக்கோவிலூர், கோட்டகுப்பம், அரக்கோணம், மயிலாடுதுறை, திருவையாறு, திருச்செந்தூர், மதுக்கரை, திருமுருகன்பூண்டி, இராசிபுரம், குளித்தலை, தாரமங்கலம், இடைப்பாடி, கொமாரபாளையம் ஆகிய நகராட்சிகளில் 106.58 கோடி ரூபாய் செலவில் பூங்காக்கள், அங்கன்வாடி மையங்கள், வகுப்பறைகள், பேருந்து நிலையங்கள், மினி மார்கெட் கட்டடங்கள், வாரச் சந்தை, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் மற்றும் குடிநீர் அபிவிருத்தி பணிகள்;

என மொத்தம் 177 கோடியே 17 இலட்சம் ரூபாய் செலவில் 35 முடிவுற்ற பணிகளை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

**பேரூராட்சிகளின் இயக்குநரகத்தில் முடிவுற்ற பணிகளை திறந்து வைத்தல்**

எழுமலை, சேத்தூர் மற்றும் கீழ்பென்னாத்தூர் ஆகிய பேரூராட்சிகளில் 6 பொது, துணை மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்கள், கீழ்பென்னாத்தூர் பேரூராட்சியில் புதிய பேருந்து நிலையம், கொரடாச்சேரி மற்றும் புஞ்சைத்தோட்டக்குறிச்சி பேரூராட்சிகளில் 2 குடிநீர் அபிவிருத்தி பணிகள், என மொத்தம் 32.23 கோடி ரூபாய் செலவில் 9 முடிவுற்ற திட்டப்பணிகளை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

**பெருநகர சென்னை மாநகராட்சியில் முடிவுற்ற பணியினை திறந்து வைத்தல்**

மணலி மண்டலம், சின்ன சேக்காடு, தேவராஜன் தெருவிலுள்ள சென்னை தொடக்கப் பள்ளியில் 2.50 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 8 வகுப்பறைகள் மற்றும் கழிப்பறைகளுடன் கூடிய புதிய பள்ளிக் கட்டடத்தை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

**சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டுதல்**

கோடம்பாக்கம் மண்டலம், காமராஜ் காலனியில் குடிநீர் விநியோகத்தை மேம்படுத்த 7 கோடியே 2 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி மற்றும் கீழ்நிலை நீர்த்தேக்க தொட்டி அமைக்கும் பணிகள்;

சோழிங்கநல்லூர் மண்டலம், எழில் நகர் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்புகளுக்கு 8 கோடியே 55 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், கீழ்நிலை நீர்த்தேக்க தொட்டி மற்றும் பிரத்யேக பிரதான குடிநீர் குழாய் பதிக்கும் பணிகள்;

மணலி மண்டலம், மணலி புது நகர் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்புகளுக்கு 10 கோடியே 22 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், நாளொன்றுக்கு 0.75 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் (STP) அமைக்கும் பணிகள்;

என மொத்தம் 25.79 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 3 புதிய திட்டப் பணிகளுக்கு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

**நகராட்சி நிருவாக இயக்குநரகம் சார்பில் புதிய திட்டப்பணிக்கு அடிக்கல் நாட்டுதல்**

சோளிங்கர் நகராட்சி, கொண்டபாளையம் பகுதியில் 11 கோடியே 48 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் மலக்கசடு சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணிகளுக்கு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

**பெருநகர சென்னை மாநகராட்சியில் புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டுதல்**

பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலதன நிதியில், சோழிங்கநல்லூர் மண்டலம், கண்ணகி நகர், 2ஆவது பிரதான சாலையிலுள்ள சென்னை தொடக்கப் பள்ளியில் 2.85 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 8 வகுப்பறைகள் உள்ளடக்கிய பள்ளிக் கட்டடம் மற்றும் சத்துணவுக் கூடம் கட்டும் பணி;

சோழிங்கநல்லூர், விவேகானந்தர் தெருவிலுள்ள சென்னை நடுநிலைப் பள்ளியில் 1.46 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 4 வகுப்பறைகள் மற்றும் கழிப்பறை வசதிகளுடன் கூடிய பள்ளிக் கட்டடம் கட்டும் பணி;

செம்மஞ்சேரி, சென்னை நடுநிலைப் பள்ளியில் 9.85 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 18 வகுப்பறைகள், 3 பணியாளர்கள் அறை, 2 கணினி ஆய்வகங்கள் மற்றும் அரங்கம் ஆகியவற்றை உள்ளடக்கிய புதிய பள்ளிக் கட்டடம் கட்டும் பணி;

திரு.வி.க.நகர் மண்டலம், பாஷ்யம் 1ஆவது தெருவிலுள்ள 1.52 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பிக்கிள்பால் விளையாட்டுத் திடல் அமைக்கும் பணி மற்றும் தேனாம்பேட்டை மண்டலம், சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் சாலை விளையாட்டுத் திடலில் 81 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் உடற்பயிற்சிக் கூடம்;

என மொத்தம் 16.49 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 5 புதிய திட்டப் பணிகளுக்கு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

**நகராட்சி நிருவாக இயக்குநரகத்தின் அலுவலக பயன்பாட்டிற்காக வாகனங்கள் வழங்குதல்**

2 மாநகராட்சிகள், 7 நகராட்சிகளின் அலுவலர்கள் மற்றும் நகரமன்ற தலைவர்களின் அலுவலகப் பயன்பாட்டிற்காக 3.28 கோடி ரூபாய் மதிப்பிலான 28 புதிய வாகனங்களை வழங்கிடும் விதமாக அவ்வாகனங்களுக்கான சாவிகளை முதலமைச்சர் அவர்கள் ஓட்டுநர்களிடம் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, துணை மேயர் மு.மகேஷ் குமார், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், சென்னை குடிநீர் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி. ஜி.வினய், நகராட்சி நிர்வாக இயக்குநர் பி.மதுசூதன் ரெட்டி, பேரூராட்சிகளின் இயக்குநர் எம். பிரதீப் குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

காணொலிக் காட்சி வாயிலாக மயிலாடுதுறை மாவட்டத்திலிருந்து பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், சட்டமன்ற உறுப்பினர்கள் நிவேதா எம்.முருகன், எஸ்.ராஜ்குமார், மாவட்ட ஆட்சித் தலைவர் ஹெச்.எஸ்.ஸ்ரீகாந்த், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.